"பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

14. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

130. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் வசதியாக்க மன்ற விதிகளை இயற்றியது குறித்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (எப்) துறையின் 19-7-2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 46-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் (மத்திய சட்டம் 27/2006) 30(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

131. 24-10-2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்-II பிரிவு-2 இல் வெளியிடப்பட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் II(2)/MAWS/687(C-1)/2016 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 1-9-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 62-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு

2024 ஜூன் 29]
மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

132. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகளை தாம்பரம் நகராட்சியுடன் இணைத்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 11-9-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 66-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகளை நாகர்கோயில் மாநகராட்சியுடன் இணைத்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 14-10-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 84-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (iii) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில பகுதிகளை கும்பகோணம் நகராட்சியுடன் இணைத்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 14-10-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 85-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவு மற்றும் 2019 ஆம் ஆண்டு நாகர்கோவில் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/2019) 11(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.*]

133. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சிகளின் உள்ளாட்சி அமைப்பிற்கு உட்பட்ட பகுதிகளை நகராட்சிகளாக அமைப்பது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 11-9-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 67-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (ii) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சிகளின் உள்ளாட்சி அமைப்பிற்கு உட்பட்ட பகுதிகளை நகராட்சிகளாக அமைப்பது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 14-10-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 81-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (iii) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சிகளின் உள்ளாட்சி அமைப்பிற்கு உட்பட்ட பகுதிகளை நகராட்சிகளாக அமைப்பது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 14-10-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 82-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் (iv) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சிகளின் உள்ளாட்சி அமைப்பிற்கு

உட்பட்ட குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை நகராட்சிகளாக அமைப்பது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 14–10–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 83–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

134. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சிகளின் உள்ளூர் அதிகார அமைப்பை நகராட்சிகளாக அறிவித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 1–11–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 94–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (ii) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சிகளின் உள்ளூர் அதிகார அமைப்பை நகராட்சிகளாக அறிவித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 7–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 116–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்; (iii) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சிகளின் உள்ளூர் அதிகார அமைப்பை நகராட்சிகளாக அறிவித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 7–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 117–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் (iv) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பேரூராட்சிகளின் உள்ளூர் அதிகார அமைப்புகளுக்கு உட்பட்ட குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை நகராட்சிகளாக அறிவித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 7–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 118–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

135. புதிதாக மாற்றியமைக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களிலுள்ள நகராட்சிகளில் எல்லை வரையறை மற்றும் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் பெண்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு இடஒதுக்கீடு செய்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 7–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 121–ல்

2024 ஜூன் 29]

வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) புதிதாக உருவாக்கப்பட 28 நகராட்சிகளில் எல்லை வரையறை மற்றும் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் பெண்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு இடஒதுக்கீடு செய்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 10–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 6–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

136. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாநகராட்சிகளுக்கு வார்டுகள் குழுக்களை அமைத்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 14–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 126–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் (ii) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாநகராட்சிகளுக்கு வார்டுகள் குழுக்களை அமைத்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 6–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 3–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 348(d) பிரிவின்கீழ், 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின்கீழ் மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(d) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

137. (i) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாநகராட்சிகள் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட நாகர்கோவில் மாநகராட்சிகள் மற்றும் 28 நகராட்சிகளின் நகர் மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 16–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 127–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் (ii) கும்பகோணம் மாநகராட்சி மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்தல் குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 24–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 136–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

[2024 ஜூன் 29

[1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவு, மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(d) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

138. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 24–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 134–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

139. (i) 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (சிற்றொகுதிகள் அல்லது கோட்டங்கள் மறுசீரமைப்பு மற்றும் இடஒதுக்கீடு) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 10–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 5–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (சிற்றொகுதிகள் அல்லது கோட்டங்கள் மறுசீரமைப்பு மற்றும் இடஒதுக்கீடு) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 17–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 13–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 348(d) பிரிவு மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(d) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

140. 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (சிற்றொகுதிக் குழுக்கள் மற்றும் பகுதி மன்றம்) விதிகளை இயற்றியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 24–6–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 92–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 348(d) பிரிவு மற்றும்

2024 ஜூன் 29]
1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(d) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

141. (i) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாநகராட்சி ஆணையர்களுக்கு அதிகார ஒப்பளிப்பு வழங்குவது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 12–11–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 100–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) கும்பகோணம் மாநகராட்சி ஆணையருக்கு அதிகார ஒப்பளிப்பு வழங்குவது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 29–12–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 140–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 348(d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(d) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

142. (i) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ஐ1) துறையின் 30–11–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 182–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ஐ1) துறையின் 26–12–2023 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 187–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 32(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

143. 2022–2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் எழுபத்து நான்காவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

144. 2022–2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் ஐம்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

145. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (தமிழ்நாட்டில் மின்கொள்முதல் முறையின் அமலாக்கம் மீதான செயலாக்கத் தணிக்கை). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

146. 2022–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (கட்டட மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் குறித்த செயலாக்கத் தணிக்கை). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

147. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (இணக்கத் தணிக்கை) (வருவாய்). (இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

327. 2020–2021 மற்றும் 2021–2022 ஆகிய ஆண்டுகளுக்கான மாநில பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு குறித்த ஆய்வறிக்கை. (தமிழ்–ஆங்கிலம்)

328. "2023–2024 ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்புகள்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்" சிறுநூல். (தமிழ்)

329. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2024–2025. (தமிழ்)